Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 30 2025

வெள்ளிக்கிழமை 31, ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 149 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

# புகழூடலுக்கு அணிதிரண்டு அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த மாவை. சேனாதிராஜாவின் புகழூடல், தெல்லிப்பழை மாவிட்டபுரம், அரசடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரது வீட்டுக்குச் சென்று பலரும் தங்களுடைய இறுதி அஞ்சலியை செலுத்தி வருகின்றனர்.

இறுதிக் கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (02) பிற்பகல் 3 மணிக்கு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்கள் பக்கம் 6

(தமிழ்மிரர் நிருபர்கள்)



# 5 பொருட்களின் விலைகள் குறைப்பு

ஐந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், புதிய விலைகள் வியாழக்கிழமை (30) முதல் அமலுக்கு வருவதாகவும் லங்கா சதொச தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் மற்றும் கோதுமை மாவின் விலை தலா 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் புதிய விலை 220 ரூபாய். ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் புதிய விலை ரூ.165 ரூபாயாகும். ஒரு கிலோ கிராம் வெள்ளை சர்க்கரையின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டதால், அதன் புதிய விலை 235 ரூபாயாகும்..

ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பின் விலை ரூ.3 குறைக்கப்பட்டதால், அதன் புதிய விலை 285 ரூபாயாகும், இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை பருப்பின் விலை 1 ரூபாவால் குறைக்கப்பட்ட பிறகு, அதன் புதிய விலை 209 ரூபாயாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேங்காய் உற்பத்திகளை இறக்குமதி செய்ய முடிவு

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள தேங்காய் பற்றாக்குறையை சமாளிக்க, இந்தோனேசியாவில் இருந்து தேங்காய் உற்பத்திகளை இறக்குமதி செய்ய உள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் கே.வி.சமந்த வித்யாரத்ன ஆகியோர் இணைந்து இந்த வாரம் சமர்பிக்க இருந்த கூட்டு அமைச்சரவை பத்திரம் தேங்காய் இறக்குமதிக்கான தற்போதைய நடவடிக்கைகள் மீள் மதிப்பீடு காரணமாக தாமதமானது.

தொடர்ச்சி P2




# “77 வது சுதந்திர தினம் எளிமையாய் இருக்கும்”

77வது சுதந்திர தின தேசிய வைபவத்தை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் டாக்டர் ஏ.எச்.எம். எச்.அபயரத்ன தெரிவித்தார்.

இதனை பொதுமக்கள் நேரில் கண்டுகளிக்க அதிக வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, அரசாங்க தகவல் திணைக்களத்தில், வியாழக்கிழமை (30) நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




# குரங்குகள் பார்ட்டி

கண்டியில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் குரங்குகள் கூட்டம் புகுந்து, ஒரு அறையில் இருந்து படுக்கை விரிப்பையும், சிற்றுண்டிப் பொருட்களையும், உள்நாட்டு மதுபானம் ஒன்றையும் திருடிச்சென்றுள்ளன. திருடிய பொருட்களை ஹோட்டலின் கூரையில் இருந்து உணண்பதையும், அவை செய்யும் சேட்டைகளையும் அங்கிருக்கும் மக்கள் தங்கள் கெமராக்களில் படம்பிடித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# தடையுத்தரவு கோரிக்கை நிராகரிப்பு

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி விஜயம் செய்யவுள்ள நிலையில் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனக் கருதி ஐந்து பேருக்கு எதிராகத் தடை உத்தரவு கோரி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் வியாழக்கிழமை (30) நிராகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் இந்த வழக்கு புதன்கிழமை (29) தாக்கல் செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்கு இடையூறு இல்லாமல், அரசியலமைப்புக்குட்பட்ட வகையில் கவனயீர்ப்பை முன்னெப்பதற்கான உரிமை சகலருக்கும் இருப்பதாக நீதிமன்றம் தெரிவித்தது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, யாழ்ப்பாணத்தில் பல்வேறு கூட்டங்களில் பங்கேற்பதற்காக வெள்ளிக்கிழமை (31) யாழ்ப்பாணம் வருகின்றார்.


இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான போராட்டத்தைத் தடுக்கும் வகையில் ஐந்து பேருக்குத் தடை கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்திருந்தனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (30) முன்வைக்குமாறு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிராகத் தடை கட்டளை கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அதனை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன் மற்றும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆஜராகி தனது வாதங்களை முன்வைத்தார்.

# “யுத்த வாகனங்களின் அணிவகுப்பு நடைபெறாது”



பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைத்து இம்முறை சுதந்திர தின விழா ஒத்திகையை நடாத்துவதாகப் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யகொந்த தெரிவித்தார்.

இம்முறை சுதந்திர தின விழாவிற்காக 1,873 படை வீரர்கள் பங்குபற்றுவதுடன், கடந்த தடவை நடைபெற்ற சுதந்திர தின விழா மற்றும் ஏற்பாடுகள் அனைத்தும் 40% வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# முன்னாள் மேலதிக செயலாளருக்கு பிணை



வர்த்தகம் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சகத்தின் மேலதிக செயலாளராக பணியாற்றி பிரியந்த குமார மாயாதுன்ன, குற்றப்புலனாய்வு பிரிவினரால், வியாழக்கிழமை (30) கைது செய்யப்பட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு தினத்தை நினைவுகூரும் வகையில் குருநாகலில் நடைபெற்ற இசுரு சவிய கூட்டுறவு தின கொண்டாட்டத்திற்கு கூட்டுறவு நிதியிலிருந்து ரூ. 183 மில்லியன் செலவழிக்கப்பட்டது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

அதன்படி, விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம் அனுப்பிய பின்னர், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய, அப்போது அமைச்சின் வர்த்தகம் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சகத்தின் மேலதிக செயலாளராக இருந்த பிரியந்த குமார மாயாதுன்ன என்பவருக்கு எதிராக குற்றவியல் தண்டனையின் கீழ் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# 26 நாட்களில் 2 இலட்சம் பயணிகள் வருகை

2025 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து 26 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 838 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 37,383 ஆகும்.

அதன்படி, ரஷ்யாவிலிருந்து 29,266 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 18,036 சுற்றுலாப் பயணிகளும்,

தொடர்ச்சி P2

# பீற்றர் இளஞ்செழியன் விசாரணைக்கு அழைப்பு

சண்முகம் தவசீலன்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவையாளருமான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்

பீற்றர் இளஞ்செழியனின் இல்லத்துக்கு சென்ற பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவு அதிகாரிகள் அழைப்பு கடிதத்தை வழங்கி சென்றுள்ளனர்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தேங்காய் உற்பத்திகளை இறக்குமதி செய்ய முடிவு

தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க, இந்தோனேசியாவில் இருந்து முக்கியமாக இறக்குமதி செய்யப்படும் விதைகள், தேங்காய்ப் பால்மா மற்றும் தேங்காய் பால் போன்ற தேங்காய் தொடர்பான பொருட்களின் இறக்குமதியை தேங்காய் சேதமடையாமல் இறக்குமதி செய்வதை உள்ளடக்குவதற்கு அமைச்சரவை பத்திரம் உள்ளதாக குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பல கலந்துரையாடல்களின் பின்னர் தேங்காய் இறக்குமதி தொடர்பான ஆய்வு தற்போது அமைச்சரவை பத்திரத்தில் கை விடப்பட உள்ளது.

“ஆராய்ச்சியின் படி, தேங்காய் உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மிகவும் பொருத்தமான நாடு இந்தோனேசியா “ என்று ரணதுங்க கூறினார். தேவைக்கு ஏற்ப தேங்காய் தொடர்பான பொருட்களை இறக்குமதி செய்ய தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தலைவர் கூறினார். மொத்தமாக 200 மில்லியன் தேங்காய்களுக்கு சமமான தேங்காய் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்பட உள்ளன.

புதிய அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும், அதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# “77 வது சுதந்திர தினம் எளிமையாய் இருக்கும்”

முன்னதாக, யாருக்காக சுதந்திர தின விழா நடத்தப்பட்டது என்ற கேள்வி எழுந்தது.இம்முறை, அதிக மக்கள் பங்களிப்புடன், மக்கள் சுதந்திர தின விழாவாக கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது, என அவர் கூறினார்.

இந்நிலையில், 77 வது சுதந்திர தின தேசிய வைபவத்துக்கு ஷ.80 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதிக்குள் செலவினங்களை மட்டுப்படுத்த அமைச்சகம் முயற்சிக்கிறது என்றார்.

பாதுகாப்புப் படைகள் போன்ற நிறுவனங்களுக்கு தனி பட்ஜெட் ஒதுக்கப்பட்டிருக்கும் என்றார். இதேவேளை, இராணுவ அணிவகுப்புகள் இடம்பெறும். எனினும், படைகளின் ஆயுத வாகன பவணிகள் இம்முறை இடம்பெறாது என்றார்.

## “யுத்த வாகனங்களின் அணிவகுப்பு நடைபெறாது”

77ஆவது சுதந்திர தின வைபவம் தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் வியாழக்கிழமை (30) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை விமானப்படையின் விமானங்கள் 03 இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே, இம்முறை யுத்த வாகனங்களின் அணிவகுப்பு நடைபெறாது என்றும், கடற்படையினால் நண்பகல் 12.00 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக கடலின் மத்தியில் கப்பலொன்றிலிருந்து மரியாதை வேட்டுக்கள் 25 தடவை தீர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸாருடன் சம்பந்தப்பட்ட அன்றைய தினத்திற்கு அவசியமான பாதுகாப்புத் தொடர்பாக மற்றும் போக்குவரத்து வாகனங்கள் செல்லும் விதம் என்பன குறித்துத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## பீற்றர் இளஞ்செழியன் விசாரணைக்கு அழைப்பு

குறித்த கடிதத்தில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு அமைவாக வாக்கு மூலம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக 2025.02.01 ஆம் திகதி காலை 10 மணிக்கு அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந்திருக்கும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவிற்கு வருகை தருமாறு அழைக்கப்படுகிறீர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## 26 நாட்களில் 2 இலட்சம் பயணிகள் வருகை

ஜெர்மனியிலிருந்து 12,663 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 12,496 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 10,361 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 8,181 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## குரங்குகள் பார்ட்டி

அந்தப் புகைப்படங்களில் ஒரு குரங்கு மதுபானத்தை ஊற்றுவதையும், மற்றொரு குரங்கு சிந்திய மதுபானத்தை குடிப்பதையும், அருகில் இருந்த மற்றொரு குரங்கு சாப்பிடுவதையும் காட்டுகிறது.

## முன்னாள் மேலதிக...

அதற்கமைய குறித்த சந்தேக நபர் குற்றப் புலனாய்வுத் துறையினரால் வியாழக்கிழமை(30) கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வு துறை தெரிவித்துள்ளது. அவரை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (30) மாலை ஆஜர்படுத்தப்பட்டபோது 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.






## அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி புண்ணியமூர்த்திக்கு பிரியாவிடை

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் 05 வது பீடாதிபதியானசட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தனது 60 வது வயதில் ஓய்வு பெறுவதையொட்டி கல்லூரியில் சேவை நலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது.

கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நியமன கடிதத்தின் பிரகாரம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் 06 வது புதிய பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள எம்.சி. ஜூனைட் தலைமையில் நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெற்றது.

பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்திக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. உப பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் முன்னிலையில் இவ் வைபவம் முகிழ்நிலை மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வி.ரி. சகாதேவராஜா






















# புகழுடலுக்கு அஞ்சலி

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினருமான மறைந்த மாவை.சோ.சேனாதிராஜாவின் புகழுடல், தெல்லிப்பழை மாவிட்டபுரம், அரசடி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 2025.02.02, ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அவருக்கு பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

(தமிழ்மிரர் நிருபர்கள்)










# இந்திய அரசாங்கத்தின் புலமைப் பரிசில்கள்

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் முழுமையான அனுசரணையுடன் வழங்கப்படும் 200க்கும் அதிகமான புலமைப்பரிசில்களுக்கு பல்வறு மட்டங்களையும் சேர்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முன்னணி இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மருத்துவம்/ துணைமருத்துவம், நவநாகரீக வடிவமைப்பு, மற்றும் சட்டத்துறை சார்ந்த கற்கைகள் தவிர்ந்த பல்வேறு துறைகளிலும் கல்வியினைக் கற்பதற்காக இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இலங்கை பிரஜைகளுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் இப்புலமைப்பரிசில்கள் 2025-2026 கல்வி ஆண்டுக்கானவையாகும்.

2. கீழ் பின்வரும் கற்கைநெறிகளுக்காக இந்த திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன;

நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல், வணிகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட அனைத்து பட்டப்படிப்பு/ பட்டமேற்படிப்பு/முதுமாணி (Undergraduate/Post Graduate & PhD ) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் முதுமாணி பட்டப்படிப்புகள்.

ராஜிவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல் இளமாணி மற்றும் தொழில்நுட்பவியல் இளமாணி பட்டப் படிப்புகளுக்கு வழிசமைக்கும் 'தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கைநெறிகள்.

டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் பொதுநலவாய புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல், வணிகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட அனைத்து பட்டப்படிப்பு/ பட்டமேற்படிப்பு/முதுமாணி (Undergraduate/Post Graduate & PhD ) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

அனைத்துப் புலமைப் பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம், மற்றும் புத்தகங்கள் & காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஏனைய பல்வேறு அனுகூலங்களுடன் இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பனவும் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு குறித்த பல்கலைக் கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு தகுதிவாய்ந்தவந்தவர்களை தெரிவுசெய்யும் செயற்பாடுகள் இலங்கை கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பாக தேவையான தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இந்த கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் இலங்கை கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் (eduwing.colombo@mea.gov.in) ஆகியவற்றை அணுகி தகவல்களைப் பெறமுடியும்.



# வாகன விபத்தில் ஒருவர் காயம்

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதி நாகொடை சந்தியில் வியாழக்கிழமை (30) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நீர்கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது நாகொடை தேவாலய வீதியில் இருந்து வந்த கார் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதுடன் இதன் போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 6 வது பீடாதிபதியாக எம்.சி.ஜுனைட் நியமனம்

வி.ரி.சகாதேவராஜா

கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நியமன கடிதத்தின் பிரகாரம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் 06 வது புதிய பீடாதிபதியாக எம்.சி. ஜுனையிட் முன்னாள் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (28) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நியமன கடிதத்தின் பிரகாரம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் நிதி மற்றும் நிருவாகத்திற்கான உப பீடாதிபதியாக கடமையாற்றியதுடன், மட்டக்களப்பு



தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதியாகவும், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.



# தீர்த்த திருவிழாவிற்கு சென்றவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, கண்டாவளை பெரிய குளத்தில் குளிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் புதன்கிழமை (29) அன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்,

பெரியகுளம் கண்டாவளையைச் சேர்ந்த கணேசமூர்த்தி ரமேஷ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரிய குளம்பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் அப்பகுதியில் நடைபெற்ற ஆலயத் தீர்த்த திருவிழாவிற்கு சென்று, குளத்துக்கு குளிக்கச் செல்வதாக கூறி குளத்தில் பாய்ந்துள்ளார். சிலர் அவரை தூக்கி வெளியில் எடுத்த போதும் அவர் மீண்டும் குளத்தில் பாய்ந்து காணாமல் போயுள்ளார்.

இவரை பிரதேச மக்கள் நீண்ட நேரமாக தேடிய நிலையில் சம்பவ தினத்தன்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரி சோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# குளவி கொட்டியதில் 19 பேர் பாதிப்பு

கேகாலை, ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோணகல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் குளவி கொட்டுக்கு இலக்காகி 13 மாணவர்கள் உட்பட 19 பேர் கரவனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

பாடசாலை அதிபர், இரண்டு ஆசிரியர்கள், 13 மாணவர்கள் மற்றும் 03 பெற்றோர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை வளாகத்தில் உள்ள மரமொன்றிலிருந்த குளவி கூடு கலைந்து இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

# கடும் மழையால் பெரும் சேதம்

நவி

மத்திய மாகாணத்தில் புதன்கிழமை (29) இரவு முதல் பெய்யும் கடும் மழை காரணமாக ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஹேவாஹேட்ட, கோணப்பிட்டிய மெரிகோல்ட் ஆகிய பிரதேசங்களில் மண்சரிவு கற்பாறைகள் சரிந்து வந்துள்ளது.

அப் பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து சகதீகளாக வீடுகள் காணப்பட்டதுடன் வீடுகளுக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.







# சட்டவிரோத தராசுகள் கைப்பற்றல்

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசத்தில் நெல் வாங்கப் பயன்படுத்தப்பட்டு வந்த, அளவை நிறுவைக்குப் பொருத்தமில்லாத, அனுமதியற்ற 3 தராசுகள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது வவுணதீவு பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், நெல் கொள்வனவு செய்யும் வர்த்தகர்களின் அளவை, நிறுவை கருவிகள் தொடர்பாக மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டிற்கமைய அளவைக் கருவிகளைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

3 தராசுகளைப் பயன்படுத்தி மோசடி செய்த வியாபாரிகளிடமிருந்து தராசுகளை கைப்பற்றப்பட்டுள்ளன.

**வாடகைக்கு**

தளபாடங்கள் இல்லாத இரண்டாவது மாடி , புதிதாக டைல்ஸ் பதிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட இரண்டு படுக்கையறைகள், இரண்டு குளியலறைகள், விறாந்தை, பேண்ட்ரி சமையலறை மற்றும் கராஜ் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு, மாதம் 80,000 ரூபாய்க்கு கொழும்பு -8 மங்கள வீதி, மெனிங் டவுன் வீட்டு வசதித் திட்டத்தில் உடனடி வாடகைக்கு உள்ளது. (இராணுவ மருத்துவமனைக்கு முன்பாக) பொரளை மற்றும் நாரஹேன்பிட்ட சந்திக்கு 2 கி.மீ. தூரம். தொடர்புகொள்ள - பஜீ 0705675564, 00447799967729 (வட்ஸ் ஆப்) 0775897125 (வட்ஸ் ஆப்)

bajiood@gmail.com

**வேலை வாய்ப்பு**

கணக்காளர் மற்றும் உதவிக்கணக்காளர் உரிய அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும், சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

இடம்:- **டெக் கோர்ப் (பிரைவட்) லிமிட்டட்.**

இல - 604, 4ம் மாடி, யுனிடி பிளாசா, கொழும்பு-04.

**தொடர்புக்கு**

**0777 672 288**

# குழந்தைகள் மீதான துஷ்பிரயோகங்களை முடக்க வேண்டும்

குழந்தைகள் நம்பகமான பாதுகாவலரால் கவனிக்கப்படாத போதெல்லாம் விரைவாக பாதிக்கப்படக் கூடியவர்களாக மாறுகிறார்கள். இன்றைய சமூகத்தில் குழந்தைகளின் தீவிர பாதிப்பு குறித்து விவாதம் நடந்தாலும், பல்வேறு காரணங்களுக்காக குழந்தைகள் நீண்ட காலமாக பாதுகாப்பற்ற குழுவாக இருந்து வருகின்றனர்.

சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக வரும் செய்திகள் அதிகரித்துள்ளதால், இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன், ஒரு குற்றத்தை புகாரளிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. ஊடகங்களும் இந்த விஷயம் குறித்து அடிக்கடி செய்தி வெளியிடுகின்றன.

விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாக, இலங்கையில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் புகாரளிக்கப்படும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கை முந்தைய காலகட்டத்துடன் ஒப்பிடும்போது ஓரளவு அதிகரித்துள்ளது என்று கூற வேண்டும்.

இருப்பினும், இன்றைய சமூகத்தில் பல்வேறு காரணங்களால் பல்வேறு வகையான குழந்தை துஷ்பிரயோகங்கள் வேகமாக அதிகரித்து வருவது உண்மைதான். இந்த வளர்ச்சி இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டவர்களால் பதிவாகும் பாலியல் குற்றங்கள் மட்டுமே தற்போது பதிவாகி வருகின்றன.

சமூகத்தில் குழந்தை துஷ்பிரயோகத்தின் மிகவும் பொதுவான வடிவங்களில் கற்பழிப்பு, சிசுக்கொலை, கடுமையான குழந்தை பாலியல் துஷ்பிரயோகம், அத்துடன் கடத்தல்கள் மற்றும் கடத்தல்கள் ஆகியவை அடங்கும். ஆனால் சிறு குற்றங்களில் குறிப்பிட்ட சதவீதம் மட்டுமே பொலிஸ் நிலையங்களில் பதிவாகின்றன.

இலங்கை பொலிஸ் நிலையங்களில் பதிவாகும் குழந்தைகளுக்கு எதிரான கடுமையான குற்றங்களைக் கருத்தில் கொள்ளும் போது, ஒவ்வொரு குற்றத்திற்கு பதிவாகும் சதவீதங்கள் வேறுபடுகின்றன.

குடும்ப மோதல்கள் காரணமாக குழந்தைகள் தவிர்க்க முடியாமல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர். நவீன சமுதாயத்தில் குழந்தைகள் மீதான குற்றங்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான வேறுபட்ட உறவுகள் ஆகும்.

இது குழந்தை துஷ்பிரயோகத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு ஆண்டும் 100,000க்கும் மேற்பட்ட குடும்பங்களில் உள்ள குழந்தைகள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவது மிகவும் வருத்தமளிக்கும் சூழ்நிலையாகும்.

குழந்தைகள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு நிலையற்ற குடும்பக் கட்டமைப்புகள் ஒரு முக்கிய காரணியாக இருப்பது தெளிவாகிறது. பெற்றோரின் பிற உறவுகள் மற்றும் குடும்ப தகராறுகள் காரணமாக குழந்தைகள் கடுமையான மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர்.

குடும்பத்திற்குள் கூட, குழந்தைகள் பாதுகாப்பற்றவர்களாக மாறுகிறார்கள். இந்த வழியில் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் மீது கவனம் செலுத்தும் போது, குழந்தைகள் தங்கள் உறவினர்களாலும், அவர்களின் மனைவியின் இரண்டாவது கணவராலும், அவர்களின் இரண்டாவது மனைவியாலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

குழந்தைகள் அடிக்கடி துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு மற்றொரு காரணி டிஜிட்டல் ஊடகங்களின் பயன்பாடு ஆகும். இப்போதெல்லாம், டிஜிட்டல் ஊடகங்களுடனான குழந்தைகளின் தொடர்புகள் அதிகரித்துள்ளன. இதுவும் அபாயகரமானது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை– 05

## உலகப்போர் ஏற்படுத்திய தாக்கங்கள்

இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதிப் பொருளாதாரமாக விரிவடைந்ததில் தேயிலைப் பயிர்ச்செய்கையின் வெற்றியும் இறப்பர் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியும் முக்கிய காரணிகளாகின. தேயிலை, இறப்பரைத் தொடர்ந்து தென்னை இலங்கையின் மூன்றாவது பிரதானமான ஏற்றுமதிப் பொருளாக மாற்றமடைந்தது. விவசாயப் பொருளாதாரத்தில் அதன் பன்முகப் பயன்பாடுகள் காரணமாக, தென்னை ஒரு வணிகத் தோட்ட ஏற்றுமதிப் பயிராக மாறுவதற்கு முன்பே தோட்ட மரமாக வளர்க்கப்பட்டது. ஏற்றுமதிக்கான மூன்று முக்கிய தேங்காய் தயாரிப்புகளில், தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பரை ஆகியவை 1870 களில் ஏற்றுமதி பொருட்களாக இருந்தன. 1890களில் காய்ந்த தேங்காய் ஏற்றுமதி இதனோடு இணைந்து கொண்டது. தென்னைப் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட நிலப்பரப்பானது 1871 இல் 500,000 ஏக்கரில் இருந்து 1911 அளவில் ஒரு மில்லியனுக்கும் மேலாக அதிகரித்தது. தேயிலை மற்றும் ரப்பர் போலல்லாமல், தென்னைப் பயிர்ச்செய்கையின் பெரும்பகுதி எப்போதுமே 10 ஏக்கருக்கும் குறைவான சிறிய நிலப்பரப்புகளிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் தென்னைப் பயிர்ச்செய்கை பல வழிகளில் முன்னோடியானது. தென்னைப் பயிர்ச்செய்கையின் நிலப்பரப்பின் விரைவான விரிவாக்கத்தை பிரித்தானிய கொலனியாதிக்கம் ஊக்குவித்தது. அதேவேளைதேங்காய் பொருட்களை பதப்படுத்தும் தொழில்துறையை உருவாக்கினார்கள். கொப்பரையை எண்ணெய் மற்றும் கொப்பரை உணவாக அரைப்பதற்கான ஒரு நொறுக்கும் ஆலை 1830 இல் தொடங்கியது. இதில் பெறப்பட்ட எண்ணெய் இலங்கையில் இருந்து ஐரோப்பாவிற்கு தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. 1853 இல் இலங்கை 33.900 கேலன்களை ஏற்றுமதி செய்தது.

1855 ஆம் ஆண்டில் சோப்பு உற்பத்தி தொடங்கியது மற்றும் பல வகையான சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. கொப்பராவை மட்டும் தொடர்ந்து ஏற்றுமதி செய்து வரும் பெரும்பாலான தேங்காய் உற்பத்தி நாடுகளை விட இலங்கை முன்னிலையில் இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் இலங்கை தென்னைப் பொருட்களை பதப்படுத்துவதில் மற்றொரு முக்கியமான படியை எடுத்தது.

தொழிற்புரட்சியைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் தொழிலாள வர்க்கத்தினரிடையே எப்போதும் அதிகரித்து வரும் மிட்டாய்க்கான தேவைக்கு மலிவான மூலப்பொருளின் தேவை எழுந்தது. இந்த மிட்டாய்க்கு,தேங்காய் சிறந்ததாக நிரூபிக்கப்பட்டது. ஆனால் முழுத் தேங்காயையும் இறக்குமதி செய்யும் நடைமுறை சிக்கலானது மற்றும் விலை உயர்ந்தது. இதற்கு தீர்வு காண இங்கிலாந்தில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. துருவிய தேங்காயை நீராவி மேசையில் சூடுபடுத்துவதன் மூலம் காய்ந்த தேங்காய் உருவாக்கப்படலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. முதல் உலர் தேங்காய் தொழிற்சாலை தெமட்டகொடையில் நிறுவப்பட்டது. 1890 அளவில்; இலங்கை 6,000 டன் காய்ந்த தேங்காயை ஏற்றுமதி செய்தது. 1900ல் இது 60,000 டன்னாக உயர்ந்தது. அந்த நேரத்தில், உலர் தேங்காய் ஏற்றுமதியில் இலங்கை முன்னணியில் இருந்தது.இதேபோல், முதல் நார் ஆலை இலங்கையிலேயே அமைக்கப்பட்டது. 1853 இல் 2,380 டன் தேங்காய் நார்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

தேயிலை மற்றும் இறப்பருக்கு மாறாக,தென்னை உற்பத்தியானது அடிப்படையில் முதலாளித்துவமற்ற செயல்முறையை இது காட்டுகிறது. மேலும் இது கிட்டத்தட்ட முற்றிலும் உள்நாட்டில் கட்டுப்படுத்தப்பட்ட துறையாகும்; 1951 இல் தென்னையின் மொத்த நிலப்பரப்பில் 85மூ இலங்கையர்களின் கைகளில் இருந்தது. எவ்வாறாயினும், சில இலங்கை தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள், 1,000 ஏக்கருக்கும் அதிகமான தென்னை தோட்டங்களை வைத்திருந்தனர். அவை பிரபலமான அரசியல் குடும்பங்களாகும்.

தேயிலை அல்லது இறப்பரை விடத் தென்னைக்குச் செலவிடப்படும் மூலதனம் மிகவும் சிறியதாக இருந்தது, மேலும் தென்னை நிலத்தை வைத்திருப்பது வளர்ந்து வரும் உள்ளூர் முதலாளித்துவ வர்க்கத்தினரிடையே செல்வத்தையும் அந்தஸ்தையும் குறித்தது. இந்தத் துறையில் உள்ளூர் நிலம் வைத்திருக்கும் வகுப்பினருக்குத் தேவையான மூலதனத்தின் பெரும்பகுதி,கொலனித்துவ அரசாங்கத்தில் பணிபுரியும் போது அவர்கள் சம்பாதித்ததில் இருந்தும், அதே போல் அரசாங்க ஒப்பந்தம்,கள், சாராய விற்பனையை வாடகைக்கு எடுத்தல் மற்றும் செட்டியார் சமூகத்திடமிருந்து கடன் வாங்குதல் ஆகியவற்றிலிருந்து வந்தது. தென்னந்தோப்புகளில் காய்கள் சேகரிப்பது, நாற்றுகள் நடுவது, உரமிடுவது தவிர பராமரிப்புக்கு அதிக ஆட்கள் தேவைப்படவில்லை. இவற்றுக்கான உழைப்பு புலம்பெயர்ந்த இந்தியர்கள் மற்றும் பக்கத்து கிராமங்களில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களிடமிருந்து வந்தது.

1930 ஆம் ஆண்டளவில்,தேயிலை, ரப்பர் மற்றும் தென்னை ஆகிய மூன்று ஏற்றுமதிப் பயிர்களும் மாற்றியமைக்க முடியாத வகையில் உறுதியாக இருந்தன. இதுஏற்றுமதி மற்றும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தை இலங்கையில் உருவாக்கியது. இக்காலப்பகுதியில் இந்த ஏற்றுமதி பயிர்கள் ஒவ்வொன்றின் அதியுச்ச பயன்பாட்டு நிலப்பரப்பு கிட்டத்தட்ட எட்டப்பட்டுவிட்டது. உலகப் பொருளாதார நெருக்கடியின் தொடக்கம், ஏக்கர் பரப்பில் மேலும் விரிவாக்கத்தை லாபமற்றதாக்கியது. மூன்று பயிர்களின் ஏற்றுமதி செய்யப்பட்ட அலகு மதிப்பும் அளவும் 1942 வரை வீழ்ச்சியடைந்தது, அந்த நேரத்தில் இரண்டாம் உலகப் போர் வெடித்தது. இது இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரம் மற்றும் அதன் பாரம்பரிய உள்நாட்டுத் துறையின் கட்டமைப்பை கடுமையாக மாற்றியது.

இரண்டாம் உலகப் போர் தொடங்கும் வரை ஏற்றுமதி - இறக்குமதி பொருளாதாரத்தில் மாற்றங்கள் அடிப்படையில் தோட்டத் துறையில் மட்டுமே இருந்தன. இந்த நடவடிக்கைகளால் பாரம்பரியத் துறைகள் பெரிதும் தீண்டப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி பொருட்கள், மண்ணெண்ணெய், பாதுகாப்பு தீப்பெட்டிகள் போன்றவற்றைத் தவிர, பாரம்பரியத் துறையானது அதன் பொது நுகர்வு மற்றும் பராமரிப்புத் தேவைகளுக்காக இறக்குமதியைச் சார்ந்திருக்கவில்லை. 1941-45 போர்ச்சூழல்தான் பாரம்பரியத் துறையை உண்மையில் இறக்குமதியைச் சார்ந்து இருக்கச் செய்தது.

போருடன்,ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மற்றும் அவற்றின் விலைகள் அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் வந்தன. அனைத்து ஏற்றுமதி பொருட்களும் பிரித்தானிய அரசாங்கத்திற்கு மொத்த கொள்முதல் ஒப்பந்தங்களின் கீழ் போருக்கு முந்தைய விலையில் விற்கப்பட வேண்டும், அவை அக்கால சந்தை விலையை விட கணிசமாகக் குறைவாக இருந்தன. இதற்கு நேர்மாறாக, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் மும்மடங்காக அதிகரித்தன. மேலும் பெரும்பாலானவை பெற முடியாததாக மாறின. நாடு போர் முயற்சிக்கு தயாராக இருந்ததால், அரிசி மற்றும் பிற உணவுப் பயிர்களின் உள்ளூர் உற்பத்தி சரிந்தது. 1942 ஆம் ஆண்டு அரசாங்கம் ஒரு புஷல் நெல்லுக்கு ரூ.2.50 உற்பத்தியாளர் மானியத்தை அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் உற்பத்தியில் எந்த அதிகரிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. நெற்ப்பயிர்ச்செய்கை தொடர்ந்து குறைந்து 1945 இல் 16.4 மில்லியன் புஷல்களை எட்டியது. கோதுமை மா போர் காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் ரொட்டி நுகர்வு பரவலாகியது. 1938 இல் வெறும் 313,800 உறவள ஆக இருந்த மாவு இறக்குமதி, 1948 இல் 3,373,000 உறவள ஆக உயர்ந்தது. 1946 இல் 283,000 பேர் மட்டுமே நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு 645,700 பேர் நெற்பயிர்ச்செய்கையில் இருந்தனர். பற்றாக்குறையின் காரணமாக, அனைத்து நுகர்வோர் உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கத் தொடங்கின. கொலனித்துவ அரசாங்கம் 1942 இல் அரிசி ரேஷன் முறையை அறிமுகப்படுத்தியது. 1945 வாக்கில் அனைத்து உணவுப் பொருட்கள்,துணிகள், மண்ணெண்ணெய், தீப்பெட்டிகள் போன்றவை ரேஷனின் கீழ் கொண்டு வரப்பட்டு விலைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டன.

போரின் முடிவில், நிலைமைகள் வேகமாக மாறின. 1947 ஆம் ஆண்டளவில் போருக்கு முந்தைய இறக்குமதி நிலை மீட்டெடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு அனைத்து முக்கிய வகைகளின் இறக்குமதிகள் போருக்கு முந்தையதை விட குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாக இருந்தது. விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் ரேஷன் முறை பொதுவாக போர் முடிவடைந்தவுடன் எளிதாக்கப்பட்டன, மேலும் உள்நாட்டு விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால், இறக்குமதியின் அதிகரிப்பு மீண்டும் தொடங்கியது. இந்த ஒரு சந்தர்ப்பத்தில், போருக்குப் பிந்தைய சமச்சீரற்ற விலைகள் இலங்கையில் பெருமளவில் தீர்மானிக்கப்பட்டன. ஏனெனில் உள்நாட்டில் கிடைக்கும் பொருட்கள் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. இவ்வாறு கவனமற்ற பொருளாதார நடவடிக்கைகளாலும் அத்தியாவசியமற்ற பொருட்களின் அளவுகடந்த இறக்குமதியாலும் இலங்கையின் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரே நெருக்கடியைச் சந்தித்தது.



## வாழ்வியல் தரிசனம்

தனிமனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் நேர்மைமிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காக தங்களை தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டிவிட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குவது, மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பெயரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாம் ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழி செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களை பார்த்து, சாதாரணமாக மக்களும் மனப்புரள்வில் சிக்குவதுண்டு. நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை; அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க.

பருத்தியூர் பாால. வயிரவநாதன்

கடிதங்கள்

## விளைந்த நெல் வயல்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின், கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளைந்த நெல் வயல்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த நெல் வயல் நிலங்களை தங்களின் உணவுத் தேவைக்காவது அரிசியை பெற்றுக் கொள்ளும் முயற்சியில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கையினால் நெல் அறுவடை செய்வதை அவதானிக்க முடிந்தது.

இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் என்றும் இல்லாதவாறு காலபோக நெல் வயல்கள் வெள்ள அனர்த்தங்களினால் அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடை இயந்திரம் கொண்டு அறுவடை செய்ய முடியாத நிலையில் தொடர்ச்சியான வெள்ள நிலைமை காரணமாக தமது உணவுத்தேவைக்காவது அரிசியை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கையினால் நெல் அறுவடை செய்து வருவதாகவும், தமது தோள்களில் சுமந்து சென்று அறுவடை செய்த நெல்லை வீதிகளில் உலர வைத்த பின்னரே நெல்லை பயன்படுத்த முடியும் என்றும் அத்துடன் தேறிய முழுமையான நெல்லாக இல்லை என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

யது பாஸ்கரன்





கொமர்ஷல் வங்கிக்கு

# ‘ஆண்டின் பசுமை வர்த்தக நாமம்’ கௌரவம்

இலங்கையின் கொமர்ஷல் வங்கிக்கு, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் (SLIM) 2024 வர்த்தக நாம சிறப்பு விருதுகளில், இலங்கையின் ‘ஆண்டின் பசுமை வர்த்தக நாமத்திற்காக’ தங்க விருது வழங்கப்பட்டுள்ளது. நிலைபெறுதகு தன்மைக்கான வங்கியின் அர்ப்பணிப்புக்கு பொருத்தமான அங்கீகாரமாக இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியானது தனது சொந்த செயற்பாடுகளுக்கு அப்பால் நாடு முழுவதிலும் உள்ள சமூகங்களை முன்னிறுத்தி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிகளை உள்ளடக்கிய நிலையில் நிலைபெறுதகு தன்மையை மேம்படுத்துவதில் மேற்கொண்டுள்ள கணிசமான முதலீடுகள் மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இந்த விருதானது அங்கீகரிப்பதாக உள்ளது.

இந்த நிலைபெறுதகுதன்மைக்கான திட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வங்கியின் ‘தேசத்திற்கான மரங்கள்’ திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் 100,000 மரங்களை நடும் செயற்திட்டமானது 12 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டமை மற்றும் இன்னும் மேலதிகமாக 100,000 மரங்களை நடுவதற்கான வங்கியின் உறுதிப்பாடு என்பவை முக்கியமானவை.

இலங்கையின் முதல் கார்பன் நடுநிலை வங்கியாக 2021 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டு சாதனையை பதிவு செய்த கொமர்ஷல் வங்கியின் நிலைபெறுதகு தன்மைக்கான பயணம் 25 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டதுடன் மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளில் இம்முயற்சியானது சீரான கதியில் இடம்பெற்று வருகிறது. இது வங்கிக்கும் நாட்டிற்கும் பல நிலைபெறுதகு தன்மையுடன் இணைக்கப்பட்ட திட்டங்களை உருவாக்கியுள்ளது.

SLIM ஆண்டின் பசுமை வர்த்தக நாமத்திற்கான விருதுக்காக மதிப்பிடப்பட்ட ஆண்டில், கொமர்ஷல் வங்கி தனது CO2 உமிழ்வை மேலும் 233,918 தொன்களால் குறைத்ததுடன் காகித பயன்பாட்டை 47.57% குறைத்தது, 286,240 கிலோ காகிதத்தை மீள் சுழற்சி செய்தது. அத்துடன் சூரிய சக்தியால் இயங்கும் கிளைகளின் எண்ணிக்கையை 82 ஆக அதிகரித்தது.

இந்த ஆண்டில் ஏனைய குறிப்பிடத்தக்க சாதனைகளில் இலங்கையின் முதல் பசுமை வீட்டுக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியமை மற்றும் அதன் முதன்மையான ComBank Digital செயலிக்காக 1 மில்லியன் வாடிக்கையாளர்களைத் தாண்டி, நிலையான வங்கியியல் நடைமுறைகளை ஊக்குவித்தமை என்பன அடங்கும்.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும், மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. கொமர்ஷல் வங்கியானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பைச் செயல்படுத்துகிறது, மேலும் இலங்கை வங்கிகளுக்கிடையில் பரந்த சர்வதேச வலையமைப்பைக் கொண்டுள்ளது, பங்களாதேஷில் 20 வங்கிக்கிளைகள், மியன்மாரில் ஒரு நுண்நிதி நிறுவனம் மற்றும் மாலைத்தீவில் பெரும்பான்மையுடன் கூடிய முழு அளவிலான முதற்தர வங்கி ஆகியவையாகும்.

# செலிங்கோ லைஃப் ‘இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனம்’

செலிங்கோ லைஃப் நிறுவனமானது 2024 ஆம் ஆண்டில் ‘இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக’ World Finance இனால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விருதை தொடர்ச்சியாக வென்றுள்ள இலங்கையின் ஒரேயொரு ஆயுள் காப்புறுதி நிறுவனமான செலிங்கோ லைஃப், இதே விருதுகளை வென்ற மாஸ்முத்துவல் (ஐக்கிய அமெரிக்கா), கனடா லைஃப் (கனடா), டால் (அவுஸ்திரேலியா), சுவிஸ் லைஃப் (சுவிஸ்லாந்து), CNP அஷ்யூரன்ஸ் (பிரான்ஸ்), சீனா லைஃப் இன்சூரன்ஸ் குரூப் (சீனா), நிப்பான் லைஃப் இன்சூரன்ஸ் (ஜப்பான்), மக்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் (இந்தியா), மற்றும் தேசிய ஆயுள் காப்புறுதி நிறுவனம் (பங்களாதேஷ்). ஆகிய 2024 நாடுகளின் வெற்றியாளர்களுடன் இணைந்துள்ளது.

World Finance இன் இந்த விருது செலிங்கோ லைஃப், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை வழங்குவதற்காக அதன் ஒட்டுமொத்த செயல்முறைகள், செயல்திறன் மற்றும் உறவுகளை தொடர்ந்து மேம்படுத்த உறுதிபூண்டுள்ள ஒரு நிறுவனமாக இயங்குவதை அங்கீகரிப்பதாக உள்ளது.

எழுத்துறுதி செயல்பாடுகள் மற்றும் செயல்முறை திறன்; காப்புறுதி ஆவணங்களை பேணல் - வாடிக்கையாளர்களின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்யும் செயல்முறை, கவரேஜின் சரியான தன்மை மற்றும் காப்புறுதி ஆவணம் ஒன்றுக்கான செலவுஇ இடர் வெளிப்பாடுஇ; வாடிக்கையாளர் தக்கவைப்பு விகிதம்; உரிமைகோரல்களைத் தீர்க்க எடுக்கும் நேரமஇ;; புதிய வாடிக்கையாளர் இணைப்பு விகிதம் மற்றும் நிதியியல் நிலைத்தன்மை - தவணை வருமானம், சந்தை பங்கு, ஆயுள் நிதி மற்றும் நிறுவனத்தின் இலாபம் ஆகியவை உள்ளடங்கலாக செயல்பாட்டு செயல்திறனின் பல அம்சங்கள் கடுமையாக மதிப்பிடப்பட்ட பின்னரே வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்

தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக 2023 இல் இலங்கையின் ‘ஆண்டின் சிறந்த வர்த்தக நாமமாக’ தெரிவு செய்யப்பட்ட செலிங்கோ லைஃப் இலங்கையில் மிகவும் போற்றப்படும் 10 நிறுவனங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டது. 2023 இல் இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICCSL) இல் பட்டய மேலாண்மைக் கணக்காளர் நிறுவனத்துடன் (CIMA) ஒத்துழைப்பு மற்றும் இரண்டிலும் ‘இலங்கையில் மிகவும் மதிப்புமிக்க காப்புறுதி வர்த்தக நாமம்’ என்று பிராண்ட் ஃபைனான்ஸ் மூலம் தரவரிசைப்படுத்தப்பட்டது.

செலிங்கோ லைஃப் 37 வருடங்களில் 20 வருடங்களாக நாட்டின் முன்னணி ஆயுள் காப்புறுதி நிறுவனமாக இருந்து வருகிறது. அத்தோடு நடைமுறையில் உள்ள மற்றும் புதுமையான ஆயுள் காப்புறுதி தீர்வுகளை வழங்குகிறதுடன் காப்புறுதிதாரர்களின் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளுக்காக ஆபத்து தன்மையினை மட்டுப்படுத்தி நிறுவனம் பாதுகாப்பை வழங்குகின்றன.




# அடைமழை



இருண்ட வானம் வெருட்டுது
இடி மின்னலற்று
மழையும்கொட்டுது
அடுத்த வேளைக்கு
அடுப்பு எரிய மறுக்கிது
அரிசி விலையோ
கூடிக்கிடக்கிது
கஞ்சிகாய்ச்சவோ பச்சையரிசி
உச்சவிலையில் இருக்கிது
தேங்காவிலையும்
அப்படி இருக்கு
ஏழை வீட்டுஅடுப்பிற்குள்
பூனை படுக்கிறது
விளைந்தவயல்
நீரில்மிதக்கிறது
சில நாளில் மீண்டுமது
முளைத்திடலாம்
அரிசிவிலை எகிறும்
என்பது மட்டும் நிச்சயம்

கந்தையா ஜெயகாந்தராஜா





# மணவாழ்க்கை அழகாகுமே



மணவாழ்க்கை மண்மீது
மாபெரும் வரமாகும்
உணர்வோடு வாழ்ந்தாலே
உலகமே நமதாகும்.
அழியாத எமதாள்கை
அடுத்த தலைமுறையர்க்கும்
பழியின்றித்தொடருதற்குப்
பண்பாடு உரமாகும்.
நெறியான இணையர்க்கு
நீதிநூல் துணையாகும்
அறிவார்ந்த பெரியோரின்
ஆசிகளும் உரித்தாகும்.
விருந்தினரை வரவேற்று
விருப்போடு உரையாடி
மருந்தெனினும் பகுத்துண்டு
மகிழ்தல் இனிதாகும்.
இசைபாடும் பறவைகளாய்
எல்லோரும் நலமுறவே
நசையோடு அறமாற்றின்
நமதாற்றல் அழகாகுமே.

கந்தவனம் கோணேஸ்வரன்.

# இரண்டு மனம்வேண்டும்

துவண்டுவிழும் போதும்
துளிர்த்து எழுந்திடவும் ,
அன்பை தெளித்திட,
ஆறுதலாய் இருந்திட
வேண்டுமே ஒருமனம்.
தோளில் விழுந்த துரோகத்தை
துடைத்திடவும்,
மன்னித்து மனம் இளகிட ,
பிரிவை மறந்திட ,
பிழையை திருத்திட
வேண்டுமே மற்றொன்று.
மன உளைச்சலின்
விளைச்சலை கதிரறுதிட,
மீளாத் துயரத்திலிருந்து
துள்ளி குதித்திடவும்,
வெற்றியை தக்கவைத்து
தோல்வியை தகர்த்திடவும்,
வசந்தமாய் வாழ்ந்திட ,
வஞ்சனையை வஞ்சித்திட ,
வெற்றிடத்தைவெளிச்சமாக்கி
விடியலாக்கிட,
வாட்டி எடுக்கும்
வார்த்தைகளை
வறுத்தெடுத்து எரித்திடவும்,
ஓர் உலகை மறந்து,
வேறுஉலகு சென்றிட,
உறவைமறந்து, ஊர்மறந்து,
ஊக்கமறந்து எடுத்திடாமல்
வேற்றுகிரகம் சென்றிட
இரண்டு மனம்
இருந்து விட்டால்
நீண்டவாழ்வும் கேட்டிடுமே
எல்லாம் கரைந்திடுமே
காலமும் இனித்திடுமே.....

றொசில்டா அன்டோ






# முடிவில்லாத கனவுகள்

ஆர்ப்பரித்தெழும் கடல்
சிரிக்கும் பாறையின் கீழ்
சிவப்பு இரத்தக்கறைகள்
முடிவுறாத அவலங்கள்
முற்றுப்பெறாத கனவுகள்.....
முழுமை பெறாமலே
பூமிமட்டுமே விடிகின்றது
வாழ்க்கை ஓட்டத்துக்கு
ஈடுகொடுக்க முடியாமல்...
மனிதம் திணறுகிறது
வறுமையை நோக்கி பயணம்
அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சுகள்
இறுகிப்போய் கிடக்கிறது
வானம் மழை தருகிறது....
நட்சத்திரங்கள் மாறவில்லை
செஞ்சூரியன் பிரதேசம் மாற்றி
பயணம் செய்கிறான்...
உலகத்தை அழைத்துச்செல்ல
நினைக்கும் மனிதனால்...
மட்டும் முடியவில்லை
அடிக்கடி தோற்றுப்போகிறான்

க.யோகானந்தன்





# மலை சரிந்தது

சோமசுந்தரம் சேனாதிராஜா என்றழைக்கப்படும் மாவை சேனாதிராஜா இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். இவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஆவார்.

அவரின் சொந்த ஊர் மாவிட்டபுரம் என்பதால் ஊரின் பெயருடன் மாவை சேனாதிராஜா எனஅழைக்கப்பட்டார்.

அவர், யாழ்ப்பாணம் மாவட்டம், மாவிட்டபுரத்தில் 1942 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி பிறந்தார்.

வீமன்காமம் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், நடேஸ்வராக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் அவர் கற்ற பின்னர், இலங்கைப் பல்க லைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் செயற்பட்டு 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தந்தை செல்வாவுடன் பங்குபற்றினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் 1962 இல் இணைந்தார்.

1966 முதல் 1969 வரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

1969 முதல் 1983 வரையான காலப் பகுதியில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு, வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகளில் மொத்தம் ஏழாண்டுகள் சிறையில் கழித்தார்.

1977 இல் மாவை சேனாதிராசா தமது உறவு முறை பவானி என்பவரைத் திருமணம் முடித்தார்.

1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார்.

1989 பாராளுமன்றத் தேர்தலில் ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகிய கட்சிகளுடன் சேர்ந்து தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத் தில் போட்டியிட்டபோதும் அதில் தெரிவாகவில்லை.

அதன் பின்னர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989 ஜூலை 13இல் கொழும்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமையை அடுத்து அவரின் இடத்துக்கு மாவை சேனாதிராஜா தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அந்தத் தேசியப்பட்டியல் பாராளுமன்ற



உறுப்பினர் பதவியைக் கூடுதலாக அம்பாறைக்கே அவர் பயன்படுத்தினார்.

பலருக்கு அம்பாறை மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், துறைமுக அதிகாரசபை நியமனங்களை பெற்றுக்கொடுத்தமையுடன் பன்முகப்படுத்தப்பட் நிதியை அம்பாறை மாவட்டத் தமிழ் கிராமங்களுக்கே அவர் ஒதுக்கியும் இருந்தார். பெரியநீலாவணை வைத்தியசாலை இவருடைய பன்முகப் படுத்தப்பட்ட நிதி மூலம் கட்டடம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1994 தேர்தலில் அம்பாறை மாவட் டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி மூல மாகத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவர் தெரிவாகவில்லை.

1999 ஜூலை 29 இல் நீலன் திருச் செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்றார்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் பாராளுமன்றம் சென்றார்.

2001 ஒக்டோபர் 20 இல் தமிழர் விடுதலை கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நிறுவிய பின்னர் 2001 தேர்தலில் யாழ். மாவடத்தில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றம் சென்றார்.

அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழர் விடுதலை கூட்டணி 15 பாராளுமன்ற உறுப்பினர்களில் 14 பேர் விடுதலைப்புலிகளைத் தமிழர்களின் ஏகபிரதிநிதியாக ஏற்க வேண்டும் என்ற தீர்மானத்தை பாராளுமன்றக் குழு கூட்ட எடுத்தபோது  ஆனந்தசங்கரி அதை ஏற்கமுடியாது என முட்டுக்கட்டை போட்டார். அப்போது விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்க வேண்டும் என்பதில் மாவை உறுதியாக இருந்தார்.

அதன்பின்னர் 2004, 2010, 2015, தேர்தல்களில் மீண்டும் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார்.

2020 தேர்தலில் போட்டியிட்டும் 29 ஆயிரத்து 358 வாக்குகளைப் பெற்றும் அவர் தெரிவாகவில்லை.

தமிழரசுக்கட்சி பொதுச்செயலாளராக 2004 தொடக்கம் 2014 வரையும் பதவி வகித்தார். பின்னர் வவுனியாவில் 2014 யில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் 15 ஆவது தேசிய மாநாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.


2024 பொதுத்தேர்தலின் போது கட் சிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் தலைவர் பதவியில் இருந்து தான் விலகுகின்றார் என அறிவித்தார்.

கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் 2024 டிசம்பர் 28 இல் வவுனியாவில் இடம்பெற்றபோது அந்தக் கூட்டத்தில் கட்சியின் பதில் தலைவர் பதவி சி.வி. கே. சிவஞானத்துக்கு வழங்கப்பட்டது. மாவைக்கு அரசியல் குழு தலைவர் பதவி வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் கடந்த 2014 செப்டம்பர்07 தொடக்கம் 2024, டிசம்பர் 28 வரையும் ஏறக்குறைய 10 வருடங்கள் தலைவராகவும், அதற்கு முன்னர் 2004 தொடக்கம் 2014 வரை 10 வருடங்கள் பொதுச்செயலாளராகவும் அவர் பதவியில் இருந்துள்ளார்.

மாவை சேனாதிராசா வீட்டில் தவறி விழுந்து தலையில் நரம்பு வெடிப்பு ஏற்பட்டதால் யாழ்ப்பாண மருத்துவமனையில் 2025 ஜனவரி 28 அன்று அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், 2025 ஜனவரி 29 அன்று சிகிச்சை பலனின்றி காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 82 ஆகும்.

மறைந்த மாவை. சோ.சேனாதிராஜாவின் புகழுடல், தெல்லிப்பழை மாவிட்டபுரம், அரசடி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 2025.02.02, ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஹிஸ்புல்லாஹ் அனுதாபம்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும், தமிழ் மக்களுக்காக தன் வாழ்நாட்களை போராட்டங்களோடு ,சிறைவாசங்களோடும் கடந்து பெரும் பங்காற்றிய சரித்திர நாயகன் மாவை சேனாதிராசா அவர்களின் மறைவு மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.


தமிழ் அரசியல் தலைவர் மாவை சேனாதிராசாவின் மறைவையிட்டு வெளியிட்ட அனுதாப செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மறைந்த தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் என்னோடு பாராளுமன்றத்தின் இருந்த ஒருவர். அவரை பற்றி நான் நன்றாக அறிந்தவன் தமிழ் மக்கள் அரசியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் தைரியமாக குரல் கொடுத்தவர் என்பதுடன் மிகவும் நீதியாகவும் நியாயமாகவும் நடந்துகொள்கின்றனர் என்பதுடன், தான் எப்போதும் மதிக்கும் தலைவர்களில் ஒருவர் என்றும் என்றும் தெரிவித்தார்.

நீண்ட காலமாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா ஐயாவின் மறைவு தமிழர் வரலாற்றில் நிரப்ப முடியாத வெற்றிடமாக இருக்கும் என்றும் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன் எனவும் தெரிவித்தார்.

## ஜெயசிறில் அனுதாபம்



அம்பாறை மாவட்டத்தையும், அம்பாறை தமிழர்களையும் நேசித்த ஒரு பெரும் தலைவர். இலங்கை தமிழரசு கட்சியின் இருக்கக்கூடிய அம்பாறை மாவட்டத்தை நன்கு தெரிந்த துணிச்சல் மிக்க பேச்சாளர் .எனது அரசியல் பாதையிலே என்னை இந்த நிலைக்கு உயர செய்ய வைத்த அரசியல் ஆசான். என்றும் மறக்க முடியாத மாமனிதன். உங்களுடைய இழப்பு வடகிழக்கு தமிழர்களுக்கு மாத்திரமல்ல உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு பேரிழப்பாக கருதுகிறேன் என காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தனது அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

அதில் மேலும் கூறுகையில்..

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ் தேசியப் பாதையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலப்பகுதியில் இருந்து ஜனநாயக ரீதியாக எமது மக்களுக்காக தன்னால் இயன்ற செயல்பாடுகளை இளவயதிலிருந்து பல சிறைவாசம் சென்று தலையில் பட்ட அடியின் வேதனையை ஒவ்வொரு பிரச்சார மேடையிலும் கூறிக் கொள்வார் .

அந்த அடியின் தாக்கமே இன்று அவர் உயிரே பிரிய காரணம்.

உங்களைப் போன்று ஒரு பொதுநலம் உள்ள ஒரு தலைவரை இனி இலங்கை தமிழரசு கட்சியில் காண முடியுமா? பதவிக்காக பறக்கின்றவர்கள் மத்தியில் தமிழ் இனத்திற்காக உங்கள் வாழ்நாள் அனைத்தையும் அர்ப்பணித்த பெருந்தலைவர் சம்பந்தர் ஐயா வழியிலே பயணித்த நீங்கள் இன்று அவரிடத்திலே சென்று விட்டீர்கள் உலகத்தில் தமிழ் தேசிய வாதிகளை உலுக்கிய மிகப்பெரும் துக்க நாளாக கருத முடிகின்றது .

பிறந்தவர் இறந்தே ஆக வேண்டும் இது எப்படி இருந்தாலும் எமது இனத்தின் விடுதலைக்காக உங்கள் வாழ்நாள் செயல்பாடை மறக்க முடியாது மனம் வருந்துகின்றோம்.

## மனோ அனுதாபம்



சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதி, இலங்கை தமிழரசு தலைவர், முன்னாள் யாழ் பாஉ என்ற தகைமைகளுக்கு அப்பால், அண்ணன் மாவை, ஒரு தமிழ் தேசிய அடையாளம் என்பது நிதர்சனம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா அவர்களின் மறைவு தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

மிக நீண்ட காலமாக தமிழர் ஜனநாயக சாலையில் பயணித்த, மாவை சேனாதிராசா என்ற தமிழ் தேசிய வாகனம் நின்று விட்ட சம்பவம் இன்று நிகழ்ந்தே விட்டது. பல உணர்வு மிக்க தரிப்பிடங்களையும், கடவைகளையும், தமிழ் தேசிய அரசியல் தலைவர்களுடன் நான் கடந்து வந்துள்ளேன். இதிலேயே அண்ணன் மாவையுடன் மிக நீண்ட காலமாக நான் பயணித்தும் உள்ளேன்.

இன்றைய இந்த சோகத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் பங்கு கொள்கிறோம். எங்கள் அனுதாபங்களை அவரை இழந்து வாடும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும், அவரது கட்சிக்கும், மக்களுக்கும் தெரிவித்து கொள்கிறோம்.


## சஜித் அனுதாபம்



தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து முன்நின்று, பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பிய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் சிரேஷ்ட தலைவருமான மாவை சேனாதிராஜா அவர்களின் திடீர் மறைவிற்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்

புட்டினை

# புட்டினை கொலை செய்ய திட்டம்?



புட்டினுக்கு மிகச்சிறந்த பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக, ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த பிரபல செய்தியாளர் டக்கர் கார்ல்சன், அண்மையில் நேர்காணல் ஒன்றில் பேசியபோது, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கம், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை கொலை செய்ய திட்டம் தீட்டியதாக குறிப்பிட்டார். இருப்பினும் தனது கூற்றுக்கு எந்த ஆதாரத்தையும் அவர் வெளியிடவில்லை.

இந்த விவகாரம் ரஷ்ய அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து புட்டினின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி மெஸ்கோவ் செய்தியாளர்களிடம் பேசுகையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு தங்கள் நாட்டின் பாதுகாப்பு படை மிகச்சிறந்த பாதுகாப்பை வழங்கி வருவதாக தெரிவித்தார்.

இருப்பினும் புதினை கொல்லும் முயற்சி எதுவும் முறியடிக்கப்பட்டதா என்பது குறித்து அவர் கருத்து தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், ரஷ்ய பாராளுமன்ற சபாநாயகர் வயாசெஸ்லாவ் வோலோடின், இந்த விவகாரத்துக்கு காட்டமான முறையில் பதிலளித்துள்ளார்.


இது குறித்து அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "புட்டினை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டுவதும், அதைப் பற்றி விவாதிப்பதும் மிகப்பெரிய குற்றமாகும். அது உலக பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும். மேலும் இது அணு ஆயுத போருக்கு வழிவகுக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

புட்டினை கொல்ல அமெரிக்கா சதி செய்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்திருப்பது இது முதல் முறை அல்ல.

கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் அணுசக்தி அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் விதமாக, அவரது தலை துண்டித்து கொலை செய்ய அமெரிக்க பாதுகாப்புத்துறை திட்டம் தீட்டியதாக அமெரிக்காவின் முன்னணி பத்திரிகையில் செய்தி வெளியானது. இந்த தகவலை மூட நம்பிக்கை என்று கூறி ரஷ்யா நிராகரித்தது குறிப்பிடத்தக்கது

சவூதி

# விபத்தில் 9 இந்தியர்கள் பலி




சவூதி அரேபியாவின் மேற்கு பகுதியில் உள்ள ஜிஷான் நகரில் இடம்பெற்ற விபத்தில் 9 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மொத்தமாக 15 பேர் உயிரிழந்தனர். அதில் 9 இந்தியர்கள் அடங்குவர் என, சவூதி அரேபியாவின் ஜெட்டாவில் உள்ள தூதுரக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக இந்திய தூதுரகம் தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து இந்திய அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு எங்களின் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். ஜெட்டாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தேவையான உதவிகளை செய்து கொடுப்பார்கள். காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டுகிறோம். இந்த விபத்து குறித்து தகவலை தெரிந்து கொள்வதற்காக, உதவி எண்களை வெளியிட்டுள்ளோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



உத்தரபிரதேசம்

கும்பமேளா கூட்ட நெரிசலில் 30 பேர் பலி:

# பொதுநல வழக்கு தாக்கல்

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடந்த மகா கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலை தொடர்ந்து, நாடு முழுவதும் இருந்து வரும் யாத்ரீகர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை அமுல்படுத்த உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் விஷால் திவாரி தாக்கல் செய்த பொதுநல மனுவில், "யாத்ரீகர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்த அடிப்படை தகவல்களை வழங்க அனைத்து மாநிலங்களுக்கும் பிரயாக்ராஜில் உள்ள வசதி மையங்களுக்கு உத்தரவிட வேண்டும். மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல், எளிதாக உதவி பெறக்கூடிய வகையில், அறிவிப்புகள், திசையைக் காட்டும் பலகைகள், சாலைகள் போன்றவற்றை பிற மொழிகளில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

"கூட்ட நெரிசலுக்கு வழிவகுத்த அதிகாரிகளின் அலட்சியத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் உத்தரவிட வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது. இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் புதன்கிழமை (29) ஆரம்பித்த முதலாவது டெஸ்டின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியாவுக்கு உஸ்மான் கவாஜாவும், அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித்தும் தொடர்ந்து ஓட்டங்களைச் சேகரித்தனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் 141 ஓட்டங்களுடன் ஜெஃப்ரி வன்டர்சேயிடம் ஸ்டீவன் ஸ்மித் வீழ்ந்தார். இதன் பின்னர் ஜொஷ் இங்லிஸூம் கவாஜாவும் ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 232 ஓட்டங்களுடன் பிரபாத் ஜெயசூரியவிடம் கவாஜா ஆட்டமிழந்தார். தொடர்ந்து இங்லிஸூம் 102 ஓட்டங்களுடன் ஜெயசூரியவிடம் ஆட்டமிழந்தார்.

பின்னர் பியூ வெப்ஸ்டரும் 23 ஓட்டங்களுடன் வன்டர்சேயிடம் வீழ்ந்த நிலையில், 6 விக்கெட்டுகளை இழந்து 654 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை அவுஸ்திரேலியா இடைநிறுத்தியது. களத்தில் அலெக்ஸ் காரி 46 ஓட்டங்களுடனும், மிற்செல் ஸ்டார்க் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை, மத்தியூ குனுமென், மிற்செல் ஸ்டார்க், நேதன் லையனிடம் ஒஷாத பெர்ணாண்டோ, திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸை இழந்து நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் கமிந்து மெண்டிஸ் 13 ஓட்டங்களுடனும், தினேஷ் சந்திமால் ஒன்பது ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளனர்.



# தலிபான் தடையை தகர்த்த ஆப்கன் கிரிக்கெட் வீராங்கனைகள்

தலிபான் தடைக்கு மத்தியில் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஒன்று கூடியுள்ளது ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி. இந்த முறை ஆஸ்திரேலியாவில் நடைபெறும் தொழில்முறை கிரிக்கெட் போட்டியில் அவர்கள் களம் காண உள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் ஆட்சி அமைந்ததும் பெண்களுக்கு பல்வேறு தடைகள் பிறப்பிக்கப்பட்டன. இதில் விளையாட்டும் அடங்கும். விளையாட்டை உயிர் மூச்சாக கருதிய வீராங்கனைகள் நாட்டை விட்டு வெளியேறினர். தற்போது அவர்கள் பல்வேறு நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதில் ஆப்கன் கிரிக்கெட் வீராங்கனைகள் சிலர் ஆஸ்திரேலியாவில் உள்ளனர். அங்கு அவர்கள் பல்வேறு கிளப் அணிகளுக்காக விளையாடி வருகின்றனர்.

இந்தச் சூழலில் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி இப்போது அங்கு ஒன்று கூடி உள்ளது. அங்கு வியாழக்கிழமை (30) நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் மகளிர் லெவன் அணி, கிரிக்கெட் வித் அவுட் பார்டர்ஸ் லெவன் அணியுடன் விளையாடியது.

இந்தியா எதிர் இங்கிலாந்து:

# இன்று நான்காவது போட்டி



இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியானது புனேயில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.


ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் இந்தியா வென்றதுடன், மூன்றாவது போட்டியை இங்கிலாந்து வென்ற நிலையில் தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியையும் இங்கிலாந்து வென்றாக வேண்டிய கட்டாயத்திலுள்ளது.

இத்தொடர் முழுவதும் சுழற்பந்துவீச்சே ஆதிக்கம் செலுத்துகின்ற நிலையில் அடில் ரஷீட் மீண்டும் முக்கியத்துவம் பெறுகின்றார். அணியைப் பொறுத்த வரையில் பில் ஸோல்டுக்குப் பதிலாக ஜேக்கப் பெத்தெல் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுப்பக்கமாக இந்திய அணியைப் பொறுத்த வரையில் ரவி பிஷ்னோய்க்குப் பதிலாக அர்ஷ்டீப் சிங் அணிக்கு மீளத் திரும்புவதோடு, உடற்றகுதியைப் பெற்றால் துருவ் ஜுரெல்லை ரிங்கு சிங் பிரதியிடுவதோடு இல்லாவிடின் ஷிவம் டுபே பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பியன்ஸ் லீக்:

# டினமோ ஸக்ரெப்பிடம் தோற்ற மிலன்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், குரோஷியக் கழகமான டினமோ ஸக்ரேப்பின் மைதானத்தில் வியாழக்கிழமை (30) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் தோற்றபோதும் இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்கான தகுதிகாண் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டியன் புலிசிச் பெற்றதோடு, ஸக்ரேப் சார்பாக மார்டின் பதுரினா, மார்கோ பிஜாக்கா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்றபோதும் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ், இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றின் தகுதிகாண் போட்டிக்குத் தகுதி பெற்றது. பெய்பிக்கா சார்பாக வன்கெலிஸ் பவ்லிடிஸ், ஓர்குன் கொக்சு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் தோற்றபோதும் அவ்வணி ஏற்கெனவே இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்கு நேரடியாக தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.